பொதுவாக, அதற்கு அடுத்தபடியாக, ஈமக்கிரியைக்காக 500 ரூபாய் இலவசமாக வழங்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு அந்த மானியத் தொகைகள், அந்தந்த ஊராட்சிகளுக்கு இதுவரையில், ஏறத்தாழ 3 ஆண்டுகளாக வழங்கப்படவில்லை. அதை உடனடியாக வழங்கவேண்டும். இந்த ஏழையெளியவர்கள் ஈமக்கிரியைகள் செய்யும்போது, அந்தப் பணம் மிக உதவியாக இருக்கும். அதை நீங்கள் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில், நமது ஏழையெளிய மக்களுக்கு அரசு வழங்குகின்ற நலத் திட்டங்கள், நேரடியாகச் சென்றடைய வேண்டியது, உள்ளாட்சித் துறை வழியாகத்தான். ஆனால், உள்ளாட்சித் துறை இன்றைக்கு மிகமிக நலிவுற்று இருக்கிறது. அதை வலுப்படுத்துவதற்கு நீங்கள் உள்ளாட்சித் துறைக்கு அதிகமாக நிதியை வழங்கி, அதை ஊக்கப்படுத்தவேண்டுமென்று கோரி, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் நாளையும் தொடரும்.

4. அரசினர் தீர்மானங்கள்-தொடர்ச்சி

(ஆ) விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றாடம் கேள்வி நேரம் இல்லை என்று சொல்கிறீர்களே? இது என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சரி, எப்போது வைத்துக்கொள்ளலாம் பதிலுரையை?

திரு. ஐ. கணேசன்: நீங்கள் மதியம் வைத்துக் கொள்ளுங்கள். தினந்தோறும் கேள்வி நேரத்தை ஒத்திவைப்பது சரியல்ல.

[2005 ஏப்ரல் 7

பிற்பகல் 1–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. பேசித்தான் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) நாளை சிறிய மானியக் கோரிக்கைத்தான். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கணேசன் (குறுக்கீடு)

திரு. ஐ. கணேசன்: Regularஆக கேள்வி நேரம் இல்லை என்கிறீர்களே? இது என்ன நடைமுறை?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இன்றைக்கு evening வைத்துக்கொள்ளலாமா? (குறுக்கீடு) அப்படி இல்லையென்றால், evening தானே வைத்துக்கொள்ள முடியும்? (குறுக்கீடு) ஏதாவது ஒன்றைச் செய்யவேண்டுமல்லவா? (குறுக்கீடு) இல்லை, அவர்கள் அதை ஒத்துக்கொள்ளவில்லை, பிரதான கட்சி ஒத்துக்கொள்ளவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை, 08–04–2005 வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (08–04–2005) அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.